# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 14578/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

**முன்னிலை** — **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**
**மாநில தகவல் ஆணையர்.**

**மனுதாரர்:** — திரு G. சீனிவாசன்
1328 / 15, முதல் மாடி
முதல் மெயின் ரோடு (Phase II)
சத்துவாச்சாரி வேலூர் 9

**பொது அதிகார அமைப்பு:** — பொதுத் தகவல் அலுவலர் / முதல்வர்
கன்கார்டியா ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
ஆம்பூர் வேலூர் மாவட்டம்

பொதுத் தகவல் அலுவலர் / முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
இராணிப்பேட்டை வேலூர் மாவட்டம்

......

மனுதாரர் G. சீனிவாசனும் பொது அதிகார அமைப்பின் சார்பாக கன்கார்டியா ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வரும் இராணிப்பேட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன பொதுத் தகவல் அலுவலரும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசார**ணைக்கு வந்திருந்தனர்.**

மனுதாரர் 12.3.09 அன்று 7 இனங்களில் தகவல் கேட்டு விண்ணப்பித்துள்ளார். மனுதாரருக்கு 20.4.09 அன்று 7 இனங்களுக்கும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. 16.5.09 அன்று கொடுக்கப்பட்ட தகவல்கள் முழுமையாக இல்லை என்று மேல் முறையீடு செய்துள்ளார். 29.6...09 அன்று இவ்வாணையத்திற்கு மேல் முறையீடு செய்த மனுவின் அடிப்படையில் வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் ஒரு சில இனங்களுக்கு தகவல்கள் தரப்பட்டுள்ளதாகவும் ஒரு சில இனங்களுக்கு நகல் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டதாகவும் மனுதாரர் தெரிவித்தார். ஒவ்வொரு இனமாக விசாரிக்கப்பட்டது. மனுதாரர் 1 (b) ல் கூறப்பட்டுள்ள நபருக்கு அளிக்கப்பட்டுள்ள பணி நியமன ஆணைக்கு நகல் கிடைக்கவில்லை என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் சம்பந்தப்பட்ட நபருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது குறித்து தகவல் ஏதும் அலுவலகத்தில் இல்லாததால் நகல் கிடைக்கவில்லை என்று கூறியுள்ளார். மனுதாரர் சம்பந்தப்பட்ட நபருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டிருப்பதால் அது குறித்து தகவல் தரப்படவேண்டும் என்று கூறினார். இது குறித்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் விசாரணை செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இனம் 1 (g) மனுதாரருக்கு நிர்வாகத்திற்கு உட்பட்ட நிதி தணிக்கை அறிக்கை இல்லாததால் கொடுக்கப்படவில்லை என்று பொதுத் தகவல் அலுவலர் கூறினார். இது குறித்து விவரமாக மனுதாரருக்கு தகவலாக தெரிவிக்க வேண்டுமென்று முடிவு செய்து கீழ்க்கண்ட் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனுதாரர் தெரிவித்த குறிப்பிட்ட நபருக்கு நியமன ஆணை வழங்கப்பட்டது குறித்து உரிய விசாரணை செய்து அதன் விவரத்தை ஆணையத்திற்கு 15 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறும் ஆணை வழங்கப்பட்டிருப்பின் அதன் நகலை 15 நாட்களுக்குள் மனுதாரருக்கு அனுப்பு மாறும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர், இராணிப்பேட்டை அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது

மனுதாரர் 1 (g) ல் தெரிவித்துள்ள தணிக்கையாளர் நிதி தணிக்கை அறிக்கை குறித்து மனுதாரருக்கு இவ்வாணை கிடைக்கப் யெபற்ற ஒரு வாரத்திற்குள் தெரிவிக்குமாறு ஆணையிடப்படுகிறது.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**

**ஆணையத்தின் ஆணைப்படி**

உதவிப் பதிவாளர்

பொதுத் தகவல் அலுவலர் / முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
இராணிப்பேட்டை
வேலூர் மாவட்டம்

பொதுத் தகவல் அலுவலர் / முதல்வர்
கன்கார்டியா ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
ஆம்.பூர்
வேலூர் மாவட்டம்

திரு G. சீனிவாசன்
1328 / 15, முதல் மாடி

முதல் மெயின் ரோடு (Phase II)
சத்துவாச்சாரி
வேலூர் 9